பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

**செ.வெ.எண். 154** **நாள்: 09.10.2018**

**பெருநகர சென்னை மாநகராட்சியில் சாலையோரம் வசிக்கும் தனிநபர்கள் மற்றும் வீடற்றோர்கள் இலவசக் காப்பகத்தில் தங்குவதற்கான விழிப்புணர்வு முகாம் நாளை (10.10.2018) நடைபெறுகிறது**

பெருநகர சென்னை மாநகராட்சி பொதுசுகாதாரத்துறை சார்பில், வருடந்தோறும் அக்டோபர் மாதம் 10ம் நாள் உலக வீடற்றோர் தினத்தை முன்னிட்டு, சென்னையில் சாலையோரம் வசிக்கும் தனிநபர்கள், மனநலன் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் வீடற்றோர் ஆகியோர் இலவசமாக மாநகராட்சி காப்பகங்களில் தங்குவதற்காக அவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த சிறப்பு முகாம்கள் நாளை (10.10.2018) காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை கோயம்பேடு பேருந்து நிலைய வளாகம், வள்ளலார் நகர் பேருந்து நிலைய வளாகம், சென்ட்ரல் இரயில்வே நிலையம், பாரிமுனை பேருந்து நிலையம், தியாகராய நகர் பேருந்து நிலையம், மெரீனா கடற்கரை, பெசன்ட் நகர் கடற்கரை, வடபழனி பேருந்து நிலையம், சைதாப்பேட்டை பேருந்து நிலையம், திருவான்மியூர் பேருந்து நிலையம், அம்பத்தூர் எஸ்டேட் பேருந்து நிலையம், எழும்பூர் இரயில் நிலையம் ஆகிய 12 இடங்களில் நடைபெறுகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் பொதுசுகாதாரத்துறையின் சார்பில் 11 ஆண்கள் காப்பகமும், 8 பெண்கள் காப்பகமும், 1 ஆண் பெண் காப்பகமும், 5 சிறுவர்கள் காப்பகமும், 4 சிறுமிகள் காப்பகமும், 2 மனநலம் பாதிக்கப்பட்ட ஆண்கள் காப்பகமும், 2 முதியோர் காப்பகமும், 1 மனநலம் பாதிக்கப்பட்ட பெண்கள் காப்பகமும், 1 அறிவுதிறன் குறைபாடுடைய சிறுவர்கள் காப்பகமும், 1 மாற்றுத்திறனாளி பெண்கள் காப்பகமும், 1 திருநங்கைகள் காப்பகமும், 10 மருத்துவமனைகளில் உள்நோயாளிகளுடன் உடனிருப்பவர்கள் தங்கும் காப்பகங்கள் என 47 காப்பகங்கள் பொதுமக்களின் நலனுக்காக இயங்கி வருகிறது.

பொதுமக்கள் தாங்கள் வசிக்கும் இடங்கள் அருகிலோ அல்லது வேறு ஏதேனும் பகுதிகளில் சாலையோரங்களில் வசிக்கும் தனிநபர், மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் இதரபிற வீடற்றோர் வசிப்பதை அறிந்தால் பெருநகர சென்னை மாநகராட்சியின் 1913, 94451 90472, 044–2530 3849 ஆகிய தொலைபேசி எண்களில் தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம். தகவல் கிடைத்தவுடன் காப்பகப் பொறுப்பாளர்கள் சம்பவ இடத்திற்கு சென்று சாலையோரம் வசிப்பவர்களை மீட்டு தகுந்த ஆலோசனைகள் வழங்கி, காப்பகத்தில் தங்கவைத்து அவர்களின் மறுவாழ்வு மற்றும் வாழ்வுரிமை பாதுகாக்கப்படும் என பெருநகர சென்னை மாநகராட்சியால் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**